Registered as a Newspaper  பக்கங்கள் 06  விலை ரூபா: 5 00
Nallur Branch Library


# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03  திருவள்ளுவர் ஆண்டு 2023  மாசி 15  (27-02-1992)  வியாழக்கிழமை  ஓசை: 09


## நீரால் பரவும் நோய்; தினசரி25000பேர் பாதிப்பு

அயன மண்டல நாடுகளில் தினசரி 25,000 பேர் நீரினால் பரவும் நோய்களினால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். நீர் மாசடைவதே இதற்கான காரணம் என உலகசுகாதாரநிறுவனம் அறிவித்துள்ளது. தெற்காசிய பிரதேசத்தைச் சேர்ந்த 60சத வீத மக்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைப்பதில்லை என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. கைத்தொழில் கழிவுகள், இரசாயனங்கள், கிருமிநாசினிகள் என்பன நீருடன் சேர்வதால் நீர்

(6ஆம் பக்கம் பார்க்க)

# அமரபுர பௌத்த பீடாதிபதி விடுதலைப் புலிகளுக்கு கடிதம்

## புலிகள் இராணுவம் பம்பைமடுவில் மோதல்

வவுனியா மாவட்டம் பம்பைமடுவில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று திடீர் மோதலொன்று ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது நேற்று மாலை 2மணியளவில் பம்பைமடுச் சந்தியினூடாக சிறிலங்கா இராணுவத்தினர் சென்றுகொண்டிருந்த போது அவ்விடத்திற்கு வந்த விடுதலைப் புலிகளை சுற்றிவளைக்க முயன்றனர்.

சுற்றிவளைக்கமுயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள்கடும் தாக்குதலைமேற் கொண்டனர். புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத சிறிலங்கா இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றுள்ளனர். இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை. புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை.

## போராட்டத்தில் மகளையும் இணைத்த வீரத்தாய்

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலை மாவட்டம் தம்பலகமம் பகுதியைச் சேர்ந்த திருமதி செல்லம்மா கந்தசாமி பதினேழு வயது நிரம்பிய தமது மகளொருவரை நேற்றுக்காலை போராட்டத்திற்கென விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் ஒப்படைத்தார். யாழ்ப்பாணத்திலுள்ள மகளிர் முன்னணி அலுவலகத்தில் தமது மகளை ஒப்படைத்த இந்தத் தாயின் மற்றொரு புதல்வரான ரவி விடுதலைப் புலிகள் இயக்கத்தில் போராளியாக உள்ளார். இவரின் கணவரான திரு. கந்தசாமி 1989-ம் ஆண்டில் ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தினரால் திருக்கோணமலையில் அநியாயமாக சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் குடும்பத்தினர் தற்போது இடம் பெயர்ந்து நாவற்குழியில் வசித்து வருகின்றனர்.

## வளைகுடா யுத்தம்

## 84,000 பாதிக்கப்பட்ட இலங்கையருக்கு நஷ்டஈடு

(கொழும்பு)

வளைகுடாவில் தொழில் புரிந்து யுத்தத்தின் காரணமாக நாடு திரும்பிய 84 ஆயிரம் பேருக்கு நட்டஈடு வழங்கப்பட உள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பணியகம் அறிவித்துள்ளது.

இந்த நட்டஈடுகளை வழங்க ஐ.நா. சபையின் நட்டஈடு ஆணைக்குழு தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் வரை ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் வளைகுடா யுத்தம் காரணமாக நாடுதிரும்பியிருந்தனர். இவர்களில் 30 ஆயிரம் பேர் மீண்டும் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்று சென்றுவிட்டனர்.

நட்டஈடு பெறுவதற்கு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டதும் இவர்களுக்கான நட்டஈடு வழங்கப்படும் என வெளிநாட்டு வேலை

(6ஆம் பக்கம் பார்க்க)

## இல. அகதிகள் குறித்து மத்திய அரசு அறிவுறுத்தல்

(டில்லி)

இலங்கைக்கு திரும்பிச் செல்லவிரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளை மட்டுமே திருப்பி அனுப்பவேண்டுமென்று தமிழக அரசிடம் கூறப்பட்டிருப்பதாக இந்திய மத்திய உள்துறை அமைச்சர் எம்.எம்.ஜேக்கப் தெரிவித்துள்ளார்.

ராஜ்யசபாவில் நேற்று உரையாற்றிய ஜேக்கப் இதனைத் தெரிவித்தார். அண்மையில் அரசு மேற் கொண்ட ஏற்பாட்டின் படி 4,049 அகதிகள் இலங்கைக்கு திரும்பியதாகவும் தெரிவித்தார்.

தமிழகத்திலும் இதர பகுதிகளிலும் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான இலங்கைத் தமிழ் மக்கள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதே நேரம் இராமேஸ்வரத்திலிருந்து நேற்று 126 குடும்பங்களைச் சேர்ந்த 520 பேர் தலைமன்னாருக்கு புறப்பட்டுச் சென்றுள்ளனர் என்று தமிழக உள்துறை அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## யாழ்.வர அனுமதி கோருகிறார்

(யாழ்ப்பாணம்)

சமாதான நல்லெண்ண தூது ஒன்றை மேற்கொண்டு அமரபுர பௌத்த பீடாதிபதி சித்தாத்த மகாதேரோ யாழ்ப்பாணம் வரவிருக்கிறார். யாழ்ப்பாணம் வருவதற்கு அனுமதிகோரி அவர் விடுதலைப் புலிகளுக்கு கடிதம் எழுதியிருக்கிறார். யாழ்ப்பாண மக்களின் நிலைமையை நேரில் கண்டறியவும், விடுதலைப் புலிகளின் தலைவர்களை நேரில் சந்தித்து பேசவும் விரும்புவதாக அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தாம் யாழ்ப்பாணம் வரும்பொழுது தம்முடன் பௌத்த பிக்குகளைக் கொண்ட குழுஒன்றையும்அழைத்துவரவிரும்புவதாகவும் அமரபுர பீடாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார். விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் அமைச்சர் தொண்டமானுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இந்தக் கடிதம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது,

## ராணுவம் முகாம் திரும்பியது

## வவுனியா ஊரடங்கு நீக்கம்

[வவுனியா]

வவுனியா பகுதியில் 'வன்னி விக்கிரம' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் தமது நடவடிக்கைகளை முடித்துக்கொண்டுமீண்டும் முகாம் திருப்பிவிட்டதாக இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி பி.பி.சி. அறிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு தொடங்கிய இந்த நடவடிக்கையில் சுமார் 3000 படையினர்ஈடுபட்டிருந்தனர்.

இந்தஇராணுவநடவடிக்கையின்போது புலிகளின்ஆர்.பி.ஜி. தாக்குதலுக்கு ஒரு கவசவாகனம் முற்றாக எரிந்ததும் அருள் 89 தாக்குதலுக்கு பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்த இராணுவ நடவடிக்கைகள் முடிவடைந்து விட்டதால் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச்சட்டம் நேற்று மதியம் 12 மணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

ஆயினும் முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ந்தும் ஊரடங்குச்சட்டம் அமுலில் உள்ளது என்றும் கூட்டுப்படை தலைமையகம் அறிவித்துள்ளது.

## பாடசாலையில் குண்டுவெடிப்பு

(மட்டக்களப்பு)

பொத்துவில் நகரில் முஸ்லிம் பள்ளிக்கூடம் ஒன்றில் நேற்று வெடிகுண்டு ஒன்று வெடித்தது. இந்தச் சம்பவத்தில் மூன்று மாணவர்கள் காயமடைந்தனர்.

வெடிகுண்டு வெடித்த சமயம் இடைவேளை நேரமாதலால் மாணவர் கட்டடத்தில் அப்போது இருக்கவில்லை. பள்ளிக்கூடக் கட்டடம் தரைமட்டமாகிவிட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

## வவுனியா தென் பகுதியில் பலத்த எறிகணைத் தாக்கு

(வவுனியா)

வவுனியாவின் தெற்குப் பகுதி சிறிலங்கா படையினரின் பலத்த தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது பேயாடி கூழாமுகளம், தாண்டிக்குளம், பூவரசம்குளம் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் அங்கிருந்து பொதுமக்களின் குடியிருப்புகளை நோக்கி பலத்த எறிகணைத் தாக்குதலையும் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டுவருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா இராணுவத்தினர் செட்டிகுளம் பகுதியிலிருந்து முன்னேற முயல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பலாலி, கல்முனை படைகள் எறிகணைத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலி முகாம் பகுதியிலிருந்து நேற்று காலை துப்பாக்கிப்பிரயோகமும், எறிகணைத் தாக்குதலும் நடாத்தப்பட்டது. இங்கிருந்து ஏவப்பட்ட எறிகணைகள் குப்பிளான், ஏழாலை மத்தி, புன்னாலைக்கட்டுவன் ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்துள்ளன.

அத்துடன் கல்முனைப்பகுதிகளிலிருந்தும் ஏவுகணைத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இவை அரியாலை கிழக்கு கேரதீவு பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. கல்முனைப் பகுதியிலிருந்து 50 கலிபர் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை கீரிமலை திருவடிநிலைப்பகுதி கடற்பரப்பிலிருந்து கடற்படைப் பீரங்கிப் படகுகள் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# நாம் பிரிந்து செல்வதை உலகம் ஏற்க வேண்டும்

## - கிறிஸ்தவ முன்னணி மகஜர்

அரசியல், பொருளாதார, இராணுவ ரீதியான அடக்கு முறைகளால் துன்புறும் நிலையிலும் கூட மக்கள் தமது கௌரவமான வாழ்வை வேண்டி நிற்கிறார்கள் இவற்றிற்கு குந்தகம் விளைவிக்கும் எவரையும் வெறுக்கிறார்களை என்று அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த தென்னிலங்கையைச் சேர்ந்த கிறிஸ்தவமத உயர் பீடத்தினருக்கு யாழ்ப்பாணம் கிறிஸ்தவ பொதுநிலையினர் முன்னணி கையளித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தாங்கள் எம்மக்களின் துயரங்களில் அக்கறை கொண்டு எமது பகுதிக்கு நல்லெண்ண விஜயங்களை மேற்கொள்வதையும் சில நன்முயற்சிகளை மேற்கொள்வதையும் மிகவும் பாராட்டுகிறோம். தொடர்ந்தும் எம் மக்கள் நியாயமான, கௌரவமானதீர்வொன்றைப் பெற்றுக் கொள்ளும் வரை இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென விரும்புகிறோம்.

இலங்கையின் இனப்பிரச்சினை பற்றி போதியளவு அறியப் பெற்றுள்ள உங்களுக்கு எமது எண்ணங்கள், கருத்துக்களையும் சமர்ப்பிக்கின்றோம்.

1948இல் நாடு சுதந்திரமடைந்ததிலிருந்து தமிழர்களாகிய நாம் மாறி மாறி ஆட்சி செய்த சிங்கள அரசுகளால் திட்டமிட்ட அடிப்படையில் புறக்கணிக்கப்பட்டும், பாரபட்சமான நடவடிக்கைகள் மூலம் துன்புறுத்தப்பட்டும் வந்தோம். அரசியல் பொருளாதாரம், கல்வி, கலாசாரம், அபிவிருத்தி போன்றவற்றில் பெரிதும் வஞ்சிக்கப்பட்டோம். கபடமான கேட்பாரற்ற நடவடிக்கைகளின் மூலம் இவ்விடயங்கள் சாதிக்கப்பட்டு வந்தன. பண்டைக் காலம் தொட்டு தனித்துவத்துடன் வாழ்ந்து வந்த தமிழ்மக்கள் பிரிட்டிசாரின் ஆளுகையின் கீழ் ஒரே நிர்வாக அமைப்பாக இணைக்கப்பட்டிருந்தமையால் சிங்கள பேரினவாதிகளின் இத்தகையவஞ்சகமான, அழித்தொழிப்பு நடவடிக்கைகட்குள் அகப்பட்டுக் கொண்டனர். மாறி மாறி வந்த அரசுகள் இனப் பிரச்சினைகளுக்கு அமைத்தீர்வைக் காணத் தவறியதாலும், கலவரங்கள் என்ற போர்வையில் இன அழிப்பு நடவடிக்கைகள் பருவத்திற்குப் பருவம் தொடர்ந்தமையாலும். தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளவும், மக்களையும், அவர்தம் உரிமை, பிரதேசம். போன்றவற்றைப் பாதுகாக்கவும் இளைஞர் ஆயுதம் ஏந்தினர். இந்நிலை அபிவிருத்தி அடைந்து இது ஓர் பாரிய போராட்டமாக மக்கள் ஆதரவைப் பெற்றிருப்பது என்பது மதிப்பீடு செய்யப்படாத ஒரு உண்மையே.

அண்மையில் ஸ்ரீலங்கா அமைச்சர் தொண்டமான் ஓரளவிற்குப் பொது நோக்கங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்த வேளை கொழும்பில் தோன்றியிருக்கும் நெருக்கடிகளைப் பார்த்தால், அதாவது சிங்களப் பொது மக்கள் ஒரு புறம் பலராலும் குழப்பப்பட்டு வருகிறார்கள் என்பது புலனாகும். இனவாதக் கட்சிகள் புதிதாகத் தோன்றியுள்ளன, பழைய கட்சிகளும் இனவாதமே பேசுகின்றன, பௌத்த மத உயர் தலைவர்கள் இத்தீர்வுத் திட்டம் பற்றி மட்டுமல்லாது அதற்கு அப்பாலும் தமது எதிர்ப்புகளை வெளிப்படுத்துகின்றனர். அது மட்டுமல்ல மாறி மாறி ஆட்சி புரிந்த இன்றைய ஆளும் எதிர்க்கட்சிகள் கூட இத்தகைய நீண்டகாலப் பிரச்சினைக்கு எதுவகைத் தீர்வையும் இன்றுவரை முன்வைக்காமல் திரு. தொண்டமான் முன் மொழிந்த தீர்வுத் திட்டத்திற்கும் கண்டனம் தெரிவிக்கின்றன.

சில நல்லெண்ணம் படைத்த சிங்கள மக்கள் மத்தியில் தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற எண்ணம் இருப்பதும், அதற்காகச் சிலர் வெளிப்படையாகவே நிகை அறிக்கை வெளியிடுவதும்கூட தெரிகிறது. தெற்கில் இராணுவ அடாவடித்தனங்களை விமர்சிப்பவர்கள் கூட அதிலும் மேலதிக பாதிப்புக்குள்ளாகியிருக்கும் தமிழ் மக்களின் அவலங்களை உணர மறுப்பதையிட்டு நாம் வேதனை அடைகின்றோம்.

கடந்த 20 மாதங்களாக பாரிய பொருளாதாரத்தடை ஒன்றை அமுல்படுத்தி அத்தியாவசிய உணவுப் பொருட்களுட்பட பல பொருள்களுக்கும், ஏனைய பாவனைப் பொருள்களுக்கும் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி வருகிறது இவற்றைப் பெறும்போது மறைமுகவரிகள், நிர்ப்பந்திக்கப்பட்ட லஞ்சங்கள் எனப் பல மடங்காக விலை அதிகரிப்பு ஏற்படுகின்றதுமல்லாமல் சேமிப்புப் பழக்கத்தை கொண்டிருந்த எம்மக்களின் அடிப்படைப் பொருளாதாரத்திலேயே வரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் யுத்தத்தை நிறுத்தி அமைதித் தீர்வு காணும்படி கூறிய அறிவுரைகளையும், தீர்வுகாணமத்தியஸ்தம் வகிக்க முன்வந்த நாடுகளின் கோரிக்கைகளையும், நிதிவழங்களையும் பேணும் பொருட்டு அநாவசிய யுத்தச் செலவுகளை நிறுத்தும்படியும் ஆலோசனை கூறிய நிதிஸ்தாபனங்கள் அரசசார்பற்ற ஸ்தாபனங்களின் கோரிக்கையை உதாசீனம் செய்துவரும் இவ்வரசாங்கம் தங்களின் நன்முயற்சிகளையும் உதாசீனம் செய்யுமாயின் அதனையும் எம்மக்கள் தமக்கான உரிமைகளை வென்றெடுக்க பிரிந்து செல்வதைத்தவிர வழியில்லை என்பதற்குரிய நியாயங்களாக உலகிற்குப் பகிரங்கப்படுத்த வேண்டும் எனவும், அங்ஙனம் தவிர்க்க முடியாத நிலையில் பிரிந்து செல்லும் எம்மை அகில உலகமும் அங்கீகரிக்கக் கோரிக்கை விடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம்.

## பத்தாண்டு நிறைவுவிழா

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தினர் நாளை யும் நாளை மறுதினமும் தமது பத்தாண்டு நிறைவைச் சிறப்பாகக் கொண்டாடவுள்ளனர்.

நாளை வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு பிரபல தொழிலதிபர் திறந்து வைக்கும் பொருட்காட்சி பிற்பகல் ஆறு மணிவரை நீடிக்கும் - நாளை மறுதினம் பிற்பகலில் பண்ணிசை, நடனம், கோலாட்டம், நாடகம் உட்பட பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## 'விழிப்பு' வெளிவந்தது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவுக்காக மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப்பிரிவினரால் வெளியிடப்படும்விழிப்பு வார இதழ் நேற்று வெளிவந்தது உள்ளூர் உற்பத்தியில் தங்கியிருப்போம் என்று விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் கோ.மகேந்திரராசா அவர்களின் வெளிவந்திருக்கும் இவ் விதழில் 'பயிரோடு வளரும் களைகள்' பற்றி ஆசிரியர் தலையங்கமும், சிங்களப் பேரினவாதம். ஒரு பார்வை உட்பட மற்றும் பல கட்டுரைகளும், பல செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

இந்தியன் தயாரிப்பான இரும்புப்பெட்டி (Iron Safe) உயரம் 2,1/2 அகலம் 1'--10'' ஐந்து பூட்டுகளைக் கொண்டது. சீராக இயங்கக்கூடியது. வர்த்தக நிறுவனங்கள் வீட்டு உபயோகங்களுக்கு உகந்தது. விபரங்களுக்கு ஈழநாதம் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும் (2241)

### தவறிவிட்டது

26-2-1992 அன்று பரமேஸ்வராசிசந்திக் கருகாமையில் பிறந்தநாள் படங்களுடன் அல்பம் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் விலாசத்திற்கு தயவு செய்து ஒப்படைக்கவும். மழலை புகைப்படநிலையம். (பேபி போட்டோ) பலாலி வீதி-திருநெல்வேலி யாழ்ப்பாணம். (2242)

## புலோலி,புற்றளை ம.வி.தில் பவளவிழா, மலர்வெளியீடு

(பருத்தித்துறை)

புலோலி புற்றளை மகாவித்தியாலய ''பவள விழாவும் மலர் வெளியீடும்'' நாளை மறுதினம் (29-2-92) சனிக்கிழமை வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு. எ. யோசுவா தலைமையில் நடைபெறவுள்ளது. விழாவை பிரம்மசிறிசோ விஜயரத்தினக் குருக்கள் அருளுரைவழங்கி ஆரம்பித்துவைப்பார், வித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. க. கதிர்காமநாதன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா பிரதம விருந்தினராகவும் வடமராட்சி கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை, சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். பவளவிழாமலர் வெளியீட்டுரையை திரு சோ. அம்பலவாணர் நிகழ்த்துவார். வித்தியாலய மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளையடுத்து பழையமாணவர் மன்றத்தின் நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. பழைய மாணவர் மன்றத்தின் விசேட நிகழ்ச்சியாக பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது. (25)

நாட்டில் தீ

## அணைக்கப்பட்டு விட்டது மீண்டும்அனுமதிக்கப்படாது

- பிரேமதாசா

(கொழும்பு)

நாட்டில் தீ அணைக்கப்பட்டு விட்டது மீண்டும் தீ வைக்க அனுமதிக்கக்கூடாது என்று ஹொரணையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசிய சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் அணைக்கப்பட்ட தீயை மீண்டும் வைக்க அனுமதிக்கக் கூடாது. எமது வெற்றிகளை நாம் தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் வடக்கு கிழக்கு யுத்தம் ஒன்றே தற்போது பிரச்சினையாக இருந்து வருகின்றது யாழ்ப்பாணத்திலும் பெரும்பகுதியை நாம் மீட்டிருக்கின்றோம். பல குழுக்கள் தற்போது எம்முடன் சேர்ந்துள்ளன. இன்னும் ஒரு குழுமட்டுமே ஜனநாயக நடவடிக்கைகளில் பங்கேற்காமல் இருந்து வருகின்றது. வடக்கு, கிழக்கில் அமைதியை நிலை நாட்ட வெளிநாட்டிலிருந்து இராணுவம் வரவழைக்கப் பட்டது. இதனை வெளியேற்ற நாடு முழுவதும் தீ வைக்கப் பட்டது என்றும் பிரேமதாசா சுட்டிக்காட்டினார்.

## பாதுகாப்பு ஊவாவில்

(பதுளை)

ஊவா மாகாணப் பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப் படுத்தப்பட்டுள்ளன. நான்கு மைல் தூரத்திற்கு இடையில் இரண்டு சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன ஊவாப்பகுதியில் நமுனுகல, பள்ளக்கட்டு பகுதியில் புதிய பொலிஸ் நிலையங்களும் திறக்கப்பட்டுள்ளன.

## ஏற்பாடுகள் தீவிரம்

## நினைவு கூருகின்றோம்

**1992-02-27**

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் தாவடியில் எமது தும்புத்தொழிற்சாலை மீதான சிறிலங்கரப் படையினரின் விமானத் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

**லூக்காஸ்** [நாவலப்பிட்டி]

தாவடி, சுதுமலை, கோண்டாவில், சுருவில் பகுதிகளில் சிறிலங்காப் படையினரின் விமான, உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 3 பொதுமக்கள்.

1991ஆம் ஆண்டு பண்குடாவெளி, தளவாயில் சிறிலங்காப்படையினர் கைது செய்த போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**கேதீஸ்** [களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு]

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி/3966)


கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கம் கரவெட்டி

## கூறுவிலை கோரல்

எமது சங்கத்திற்கு கீழ்வரும் இடங்களிலிருந்து பொருட்களை ஏற்றி இறக்க லொறிக் கூலி பற்றிய கூறு விலைகளை பொது முகாமையாளர், கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் என்ற முகவரிக்கு முத்திரையிடப்பட்ட உறைகளிலிட்டு 05-03-1992 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

1. கொழும்பு — ஊரியான் ஆணையிறவு
2. ஊரியான் — இயக்கச்சி (வள்ளம்)
3. இயக்கச்சி — கரவெட்டி (கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்)
4. கொழும்பு — கரவெட்டி (கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்)

(சி 3967)

பொது முகாமையாளர்



பேராதனைப்பல்கலைக்கழக கலைமாணி(B.A)

## விரிவுரைகள் 1992 டிசம்பர்

மேற்படி பாடநெறிக்கான விரிவுரைகள் 1-3-1992 ல் ஆரம்பமாகின்றன. இதுவரை பரீட்சை முடிவுகள் கிடைக்கப் பெறாத மாணவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

உதவிப்பதிவாளர்

பட்டப்படிப்புகள் கல்லூரி

148/1 ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(சி 3965)

Nallur Branch Library

# தேர்தல் நடத்தும் சூழ்நிலை ஜம்மு-காஷ்மீரில் இல்லை

## அமைச்சர் ஜேக்கப்

(டில்லி)

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் தேர்தலை நடத்துவதற்கான ஒரு சூழ்நிலை உருவாகவில்லை என இந்திய உள்துறை துணை அமைச்சர் எம். என். ஜேக்கப் தெரிவித்துள்ளார்.

இந்திய லோக்சபாவில் நேற்று முன்தினம் உரையாற்றிய எம்.என். ஜேக்கப் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் மேலும் ஆறுமாத காலத்திற்கு ஜனாதிபதி ஆட்சியை நீடிப்பதற்கான பிரேரணை ஒன்றை சமர்ப்பித்தார். அப்போது பேசிய அவர் தேர்தல் நடத்துவதற்கான காலம்கூடிவரவில்லைஎன்றும்.

இங்கு தேர்தலை நடத்துமாறு எந்த ஒரு பிரதான அரசியல்கட்சியும் அரசாங்கத்தை கோரவில்லை என்றும்,

நிலைமை சுமுகமடைந்ததும் அங்குஅமைதியான முறையில் தேர்தல் நடத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இதே நேரம் மார்ச் மாதம் 3 ஆம்திகதியிலிருந்து காஷ்மீரில் ஜனாதிபதி ஆட்சிமுறை முடிவடைகின்றது.

தீவிரவாதிகளால் இந்திய அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தீவிர நடவடிக்கைகளுக்குப் பின்னர் 1990ஆம் ஆண்டு யூலைமாதம் 18ஆம்திகதி ஜனாதிபதிஆட்சி முறை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்த இருவருட காலப் பகுதிகள்இந்தமாநிலத்தில் பொது மக்கள். இராணுவம் மற்றும் தீவிரவாதிகள் என்றவகையில் ஆறாயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தீவிரவாதக் கிளர்ச்சியை எந்த வகையில் தீர்ப்பது என்பதனைஇந்தியஅரசாங்கம்பல அரசியல் கட்சிகளுடனும் சேர்ந்து ஆலோசித்து வருகின்றது.

# ரயில்வே பட்ஜெட் குறைபாடு உடையது

## - ஜெயலலிதா

(சென்னை)

இந்தியப் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்ட 1992, 93 ஆம் ஆண்டிற்கு ரயில்வே வரவு செலவுத்திட்டம் பல குறைபாடுகளைக் கொண்டுள்ளது என தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து ஜெயலலிதா சென்னையில் அறிக்கையொன்றை விடுத்துள்ளார். இதில் ரயில்வே வரவு செலவுத் திட்டத்தில் பயணிகள் கட்டண உயர்வும், சரக்குக் கட்டண உயர்வும் சாதாரண பொது மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது.

பயணிகளுக்கு வசதிகளைச் செய்து கொடுக்காமலேயே ரயில் கட்டணத்தை உயர்த்தியிருப்பது நியாயமாற்றது. குறிப்பாக சரக்குக் கட்டண உயர்வு அனைத்து வகையிலும் பணவீக்கத்திற்கு வழி வகுக்கும்.

நிலக்கரிக்கான சரக்குக் கட்டணத்தை உயர்த்தியிருப்பது மின்சார உற்பத்திக்கு நிலக்கரி வருமானத்தில் பெரிதும் சார்ந்த தமிழகத்தை மிகவும் பாதித்துள்ளது. இது நேரடியாக தமிழகத்தை பாதித்துள்ளது.

மேலும் தமிழகம் தொடர்பான எந்த ஒரு அபிவிருத்தி வேலைகளும் இதில் குறிப்பிடப்படவில்லை.

பொதுவாக மத்திய அரசின் எதிர்க்கட்சிகள் ரயில்வே வரவு செலவுத் திட்டத்தை குறையுள்ளது என்றே தெரிவித்துள்ளன.

## ராஜீவ்காந்தி கொலை விசாரணை

# வர்மா ஆணைக்குழு மரகதம் மீது கண்டனம்

(டில்லி)

சிறிபெரும்புதூர் எம். பி. திருமதி மரகதம்சந்திரசேகரர், ராஜீவ்காந்தி கொலைதொடர்பான விசாரணையில் தொடர்ந்தும் ஆஜராகாமலே இருந்து வருகிறார் என வர்மா ஆணைக்குழு ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

திரு. ராஜீவ்காந்தியின் கொலைக்கு வழிவகுத்திட்ட பாதுகாப்புக் குறைபாடுகளைப்பற்றி புலன் விசாரணை நடத்திவரும் வர்மா ஆணைக்குழுவே தனது ஆட்சேபத்தை புதுவில்லியில்நேற்று முன்தினம் வெளியிட்டது.

இந்த ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகாமல் இருந்தமைக்காக நீதிபதி எல்.எஸ். வர்மா திருமதி மரகதம்சந்திர சேகரரைக் கண்டித்து குறை கூறியுள்ளார்.

## வெளிநாட்டு உதவிகளைத் தடுக்கவே

# மனிதஉரிமைப் பிரசாரம் துரோகமான செயலாகும்

## -அமைச்சர் அஸ்வர்

(கொழும்பு)

இலங்கைக்கு வெளிநாடுகள் வழங்க முன்வரும் உதவிகளை மனிதஉரிமைகளின்பேரில்பிரச்சாரம் செய்து தடுக்க முயல்வது தேசத்துரோகமான செயலாகும் என்று முஸ்லிம் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஏ எச் எம். அஸ்வர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரச வங்கிகளை மறு சீரமைக்கும் நடவடிக்கைகள் தொடர்பான விவாதத்தின் ஒத்திவைப்பு வேளையில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறுகையில் வெளிநாட்டு உதவிகளை தடுக்கும் பிரசாரங்களை மேற்கொள்வதில் குறிப்பிட்ட ஒரு இனத்தினர் மாத்திரமே ஈடுபடுகின்றனர். என்று நான் கூறவில்லை. பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்களும் இத்தகைய காரியங்களில் ஈடுபடுகின்றார்கள் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் இலங்கையின் பெயருக்கு மாசு கற்பிக்கும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் உதவிகள் அரசாங்கத்திற்கு தொடர்ந்து கிடைக்கின்றன என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

# நாஸிகள் தப்பிச் செல்ல வத்திக்கான் உதவவில்லை

## - பாப்பரசர்

(செனகல்)

உலகயுத்தத்திற்குப் பின்னர் நாஸியுத்தக் குற்றவாளிகள் ஐரோப்பாவிலிருந்து தப்பிச் செல்ல வத்திக்கான் உதவியதாக இஸ்ரேல் கூறியுள்ள குற்றச்சாட்டை வெறும் கற்பனை என வத்திக்கான் மறுத்துள்ளது.

மேற்கு ஆபிரிக்க சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டு டாக்காவிற்கு சென்ற பாப்பரசர் நிருபரிடம் இதனைத் தெரிவித்தார்.

கடந்த பல வருடங்களாக இஸ்ரேல் இக் குற்றச்சாட்டைச்சுமத்தி வருகிறது நாஸியுத்தக் கைதிகள் பற்றிய பொலிஸ் பைல்களை ஆர்ஜண்டீனா வெளியிட்டதை அடுத்து இப்பிரச்சினை மீண்டும் எழுந்துள்ளது.

இதே நேரம் அமெரிக்காவின முன்னாள் ஜனாதிபதி றேகனும் போலந்தின் சொலிடாரிட்டி யூனியனுக்கு உயிரூட்டவும் கிழக்கைரோப்பாவில் சோவியத் கட்டுப்பாட்டை ஆட்டம் காணச்செய்யவும் இரகசியமாக இணக்கம் தெரிவித்ததாக 'டைம்' பத்திரிகையில் வெளியான செய்தியையும் பாப்பரசர் மறுத்தார்.

## மத. கிழக்கு சமாதான மாநாடு

# தன்னாட்சி பகிர்வு குறித்து பொது கருத்துகிட்டவில்லை

(லண்டன்)

வாஷிங்டனில் நடைபெறும் மேற்காசிய அமைதிப் பேச்சுவார்த்தைகளில் ஒரு கட்டமாக ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் தன்னாட்சி பற்றிய தமது கருத்துக்களை வெளியிடும் ஆவணங்களை இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனியப் பிரதிநிதிகள் பரிமாறிக் கொண்டனர் என பி. பி. ஸி தெரிவித்தது.

இந்த ஆவணங்களில் தங்களுக்கு ஏற்புடைய அடிப்படை பொது அம்சம் எதுவும் இல்லை என்று இருதரப்பினரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்

குடியிருப்புக் கட்டும் பணி நிறுத்தப்பட்டாலன்றி சுய ஆட்சி குறித்த பேச்சுக்களில் தாங்கள் கலந்து கொள்ள விரும்பவில்லை என்று பாலஸ்தீன பிரதிநிதிகளும்.

குடியிருப்புக் குறித்த விடயம் பின்னர் விவாதிக்கப்பட வேண்டுமென்று இஸ்ரேலும் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய திட்டம் இனப் பாகுபாடானது என்றும், அரபு நிலத்தை பறிப்பதாக அமைந்திருக்கிறது என்றும் பாலஸ்தீனிய பிரதிநிதி தெரிவித்துள்ளார். அமெரிக்க நிபந்தனைகளை இஸ்ரேலிய அரசாங்கம் ஏற்காது என்று இஸ்ரேலின் துணைப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

# பனிப்பாறை சரிவுகளினால் துருக்கியில் 25 பேர் பலி

(அங்காரா)

துருக்கியின் பல்வேறு பகுதிகளிலும் மீண்டும் ஏற்பட்டுள்ள பனிப்பாறை சரிவுகளினால் குறைந்தது இருபத்தைந்து பேர் உயிரிழந்துள்ளனர். பதினொரு பேர் காயமுற்றுள்ளனர். இருபத்தைந்து பேரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிக்க கடுமையான நடுங்க வைக்கும் குளிர் காரணமாக மீட்புப் பணிஉதவிகள் தடைப்பட்டுப் போயிருப்பதாகவும் அங்காராவில் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

துருக்கியில் இந்தக் குளிர் காலத்தில் வீசியுள்ள பனிப்பாறைச் சரிவுகள், மற்றும் பனிப்புயல்கள் இதுவரை முந்நூறு பேரை கொண்றுள்ளது என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

# விலை அதிகரிப்பை தவிர்க்க யோசனை

(றியாத்)

கழிவு எண்ணெய் விலை அதிகரிப்பைத் தவிர்க்க என்ன செய்யலாம் என்பது குறித்து ஒபெக் எண்ணெய் அமைச்சர் ஆராய்ந்து வருகின்றார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தீவிரவாதத்தை சமாளிக்க

# உத்தரப் பிரதேசத்தில் சிறப்புத் திட்டம்

(லக்னோ)

உத்தரப் பிரதேசத்தில் தீவிரவாதத்தைச் சமாளிப்பதற்கான ஒரு சிறப்புத் திட்டத்திற்காக மாநில அரசு 36 கோடி ரூபாவினை செலவிடவுள்ளதாக உள்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மாநிலத்தில் தீவிரவாத நடவடிக்கைகள் காரணமாக எழுந்துள்ள சூழலைக் கருத்தில் கொண்டு மத்திய உதவி வரும் வரை காத்திருக்காமல் மாநில அரசு இத்திட்டத்தை செயல்படுத்தத் தொடங்கி விட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

# லிபியஏவுகணைஇடமாற்றம் அமெ. தாக்குமென அச்சம்

(வாஷிங்டன்)

மேற்கு நாடுகளின் தாக்குதல் இடம் பெறக்கூடும் என்ற அச்சம் காரணமாக லிபியா நடமாடும் ஏவாயுதங்களை மறைத்து வைக்க ஆரம்பித்திருப்பதுடன், வானப்பாதுகாப்பையும் பலப்படுத்தி வருவதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சோவியத்தில் செய்யப்பட்ட ஸ்கட் ஏவாயுதங்களை மேற்கு நாட்டுத் தாக்குதலில் இருந்து பாதுகாப்பதற்காக லிபியா அவற்றை வேறு இடங்களுக்கு அகற்றிவருவதற்கு கடந்த சில வாரங்களாக ஆதாரம் கிடைத்து வருவதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க விமானத்தில் குண்டு வைத்த இரு லிபியர்களை ஒப்படைக்குமாறு மேற்கு நாடுகள் நிர்ப்பந்தம் செய்து வரும் இவ்வேளையில் லிபியா மேற்கொண்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கை குறித்து வாஷிங்டன் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

இதற்கிடையில் அமெரிக்கா, பிரிட்டன் பிரான்ஸ் ஐ.நா. ஆகியவற்றின் கோரிக்கைகளை லிபியாமீறியிருக்கிறது லிபியா இரு உளவாளிகளையும் கையளிக்கவில்லை. இக் குற்றம் பற்றி தனக்கு தெரிந்த சகல தகவல்களையும் தெரிவிக்கவில்லை. பயங்கரவாதிகளுக்கு ஆதரவளிப்பதை முடித்துக் கொள்ள ஆக்கபூர்வமான நடவடிக்கையை லிபியா எடுத்துக் கொள்ளவில்லை என அமெரிக்க வெளி நாட்டமைச்சக அதிகாரி பௌச்சர் தெரிவித்துள்ளார்

இதேவேளை உபஜனாதிபதி டுவைல் தனது பிரிட்டிஷ் விஜயத்தின் போது பேசுகையில் கடாபியின் செயல் குறித்து பிரிட்டன் பொறுமையிழந்து வருவதாக கூறியிருக்கிறார்.

# நமீபியாவிற்கு உதவுவதாக இந்தியா வாக்குறுதி

(டில்லி)

நமீபியாவின் தேச நிர்மாணப் பணிகளுக்கு சாத்தியமான எல்லா உதவிகளையும் அளிப்பதாக இந்தியா அந்த நாட்டிற்கு உறுதியளித்துள்ளது.

இந்தியா வந்துள்ள நமீபிய ஜனாதிபதி சாம்நுஜோமாவிடம் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் இந்த வாக்குறுதியினை தெரிவித்தார்.

இச்சந்திப்பின் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய சாம்நுஜோமா 'வளர்ந்த நாடுகளுடன் மண்டல சார்பற்ற நாடுகள் போட்டியிடவும் பேரம் செய்யவும் இந்தச் சந்திப்பு உதவிடும்' என்று கூறினார்.

இதே நேரம் சாம்நுஜோமாவை கௌரவிக்கும் முகமாக இந்தியா அவருக்கு இந்திரா காந்தி விருது வழங்கியது.

# தமிழீழ விடுதலைப் புலிகள் சமருக்கு ஆயத்தமாகின்றார்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

பிரச்சினை என்னவென்றால் தென், தென்மேற்கு வலயங்களிலுள்ள எல்லாப் பெரியதாக்க நடவடிக்கைகளுக்கும் குடாநாட்டிலிருந்து ஊர்காவற்றுறையையும் பூநகரியையும் பிரிக்கும் ஆழமில்லாத கடல் காரணமாக கடல் தரைக் கருவிகள் தேவைப்படும் ஒன்றுக்கு மேற்பட்ட பாரிய கடற்றரைச் சமரானால் ஆதாரப் பின்னணி இடர்கள் ஏற்படலாம். புலிகள் பின்னர் ஏற்றுக் கொண்டது போல் வெற்றிலைக்கேணியில் அவர்களது தற்காப்பு நிலைகள் நாட்செல்ல திறந்த வெளிக்குத் தள்ளப்பட்டது போல் அல்லாது குடாநாட்டின் உட்பகுதிகள் யாவும் கடற்கரை ஓரங்களில் கட்டடங்களைக் கொண்டதாயுள்ளன. கேரதீவு, சாவகச்சேரி வீதி, அராலித்துறை, பொம்மை வெளி வீதி ஆகிய இடங்களில் வெட்ட வெளியிலுள்ளனவாயினும் அவற்றின் உட்பகுதிகளில் அதிக அளவு கட்டிடங்களும் சிக்கலான ஒழுங்கை அமைப்புகளும் உள்ளன.

## சிவப்புமண் பிரதேசம்

மறுபுறத்தில் வடக்கு வடமேற்கு இராணுவ வலயங்கள் மிகக் கூடிய சனத்தொகை கொண்ட சிவப்பு மண் பிரதேசமாகும். புலிகளின் பெரும் எதிர்ப்பு இல்லாமல் இவ் வலயம் பெருளவு சிவப்புமண்பிரதேசங்களான குரும்பசிட்டி கட்டுவன் ஆகிய உள்பகுதிக்கும் அச்சுவேலி இடைக்காட்டுப் பகுதி ஊடாகக் கரையோரத்தில் தொண்டமனாறு வரையும் ஆண்டு விரிவாக்கப்பட்டது.

இவ்விரிவாக்கப்பட்ட இராணுவ வலயத்துக்குள் பொது மக்கள் மிகக் குறைந்த அளவில் அல்லது இல்லாத நிலைதான் இருக்கின்றது. ஒரு பாரிய தாக்குதல் நடக்குமென அறிகுறி கண்டதும் மக்கள் அந்த இடத்திலிருந்து வெளியேறி விடுவார்கள். மக்கள் இல்லாத இராணுவக்கட்டுப்பாடு அரசியல் நோக்கில் அர்த்தமற்றது. புலிகளிடமிருந்து பொதுசனக் கட்டுப்பாட்டையும் பறித்தெடுக்கும் எண்ணம் இருந்தால் மக்களின் இடநகர்வு இல்லாத வகையில் இராணுவம் முன்னேறுவது பிரச்சினையான விடயம்.

கடைசியாக வல்லிபுரம், தாளையடிக் கடலோரம் அப்பகுதிகளிலுள்ள திறந்த வெளிகள் காரணமாக உள்ளிடுவதற்கு வாய்ப்பு உண்டு.

ஆகவே தமது பத்திரிகை மூலம்குடாநாட்டின் எல்லைப் புறங்களிலிருந்து உள்நாட்டுக்குள் குறிப்பிட்ட முனைகளிலிருந்து சமகாலத் தாக்குதலை எதிர்நோக்கும் புலிகள் தமது போராளிகளையும், வளங்களையும், சுடு பொருட்கள் ஆகியவற்றையும், இராணுவத்தின் மூன்று தாக்குதல் வலயங்களிலிருந்தும் ஏற்படக் கூடிய கடல் தரை மார்க்கத் தாக்குதல்களுக்கும் ஈடு கொடுக்கும் வகையில் இங்கே விபரிக்கப்பட்ட ஆகக் குறைந்த அளவில் ஐந்து முனைகளுக்கிடையில் பிரித்துக் கொள்ள வேண்டும்.

மிக அவசியமும் பிரதானமான துமான எறிகணைத்தாக்கு சக்தி குறைந்த தமது படையைக் கொண்டு யாழ்ப்பாணத்தை தற்காத்துக் கொள்ளும் நடவடிக்கையில் புலிகளுக்கு எப்போது, எங்கே எவ்விதம் தாக்குதல் நடத்தலாம் என்ற தீர்மானத்தை எடுக்கும் சந்தர்ப்பத்தை இராணுவத்துக்கு அளிக்கும் நிலையைத் தவிர வேறு வழியில்லை. இச்சூழ் நிலையில் புலிகள் தங்கள் படைப்பலத்தைப் பிரித்துத்தான் ஆக வேண்டும்.

தளபதி யோமினியின் கருத்துப்படி இந்நிலையே மரபு வழிப் போராட்ட வரலாற்றுப்படி அழிவை ஏற்படுத்துவதற்கான தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும். வளர்ச்சியடைந்த கட்டுக்கோப்புகளையும் சிக்கலான வீதிகள், கையொழுங்கைகளையும் கொண்ட உட்பகுதிகளிலிருந்து யாழ்ப்பாண எல்லைப்புறங்களில் தாக்குதல் நடத்தும் சாத்தியக் கூறுகள் உள்ளது என எதிர்பார்க்கப்படும் முனைகளுக்குத் தேவையானவற்றை இலேசாக எடுத்துச் செல்லக்கூடிய நிலைமையிருப்பது யோமினியின் மேற்கூறிய வரலாற்றுநியதியமற்றும்தன்மையை உருவாக்குகிறது யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளிலிருந்து வடமராட்சியைப் பிரிக்கும் பாரிய திறந்த வெளிப் பிரதேசமான வல்லை வெளிப் பிரச்சினை புலிகள் வடமராட்சிக்கும் வடமராட்சியல்லாத பகுதிகளுக்கும் வெவ்வேறு தலைமையை ஏற்படுத்தியதன் மூலம் தீர்த்துள்ளனர். இதனால் ஓர் இடத்தில் தாக்குதல் நடத்தப்படப் போவது உண்மையெனத்

— தராக்கி —

தெரிந்ததும் தமது படையினரையும், பொருட்களையும் அந்த முனைக்கு எடுத்துச் செலவதற்கு புலிகளுக்குப் போதிய நேரம் கிடைக்கும். ஆனால் ஒன்றுக்கு ஒன்று உதவியாக இரு முனைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டால் புலிகள் குடாநாட்டின் ஒரு பகுதியையோ அல்லது சில பகுதிகளையோ இழக்க நேரிடும். புலிகள் இராணுவ ரீதியாக எவ்விதம் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்பதைத் தீர்மானிப்பதில் முக்கிய அம்சமாக விளங்கப் போவது யாழ்ப்பாணத்தை தற்காத்துக்கொள்ளும் சமரில் அல்லது சமர்களில் எவ்வளவு இளைஞர்களையும் இளம் பெண்களையும் ஈடுபடுத்துவார்கள் என்பதில்தான் தங்கியுள்ளது.

இயன்றளவு இழப்புகளைக் குறைத்து மனித வளத்தைப் பாதுகாக்க வேண்டுமென்பதில் தீர்க்கமான தெளிவான எண்ணத்தை புலிகள் கொண்டுள்ளனர் என்று நான் எண்ணுகிறேன். அவர்களின் புள்ளி விபரங்களின்படி சென்ற வருட ஒக்டோபரிலிருந்து டிசெம்பர் வரையிலான கால எல்லைக்குள் தாங்கள் 86 உறுப்பினர்களை மாத்திரம் இழந்துள்ளதாகவும், ஆனால் 155 ஆயுதங்களைக் கைப்பற்றியும் 256 இராணுவத்தினரைக் கொன்றதாகவும் கூறுகிறார்கள். இம்மாதிரியான நிலைதான் இனி தொடரும் என அவர்கள் கூறுகிறார்கள்,

யாழ்ப்பாணத்தை தற்காக்கவும் மனிதவளத்தைப் பாதுகாப்பதும் என்ற இரு குறிக்கோளை அவர்கள் எவ்விதம் நடைமுறைப்படுத்துவார்கள் மாத்தயாவின் செய்தியில் உள்ளடங்கிய நிபந்தனைகளும் அவர்களால்கூறப்படும்ஏனைய கருத்துக்களும் இதற்கு மறுமொழியைத்தரும்யாழ்ப்பாண சமர் ஓர் தற்காப்புச் சமராக இருக்குமென புலிகள் எதிர்பார்க்கின்றார்கள். ஆகவே உயிர் இழப்பு குறைவாக இருக்கும். ஆனால் மக்களின் பங்களிப்பும், ''சமர்களில் எல்லாம் பெரியசமர்'' என்ற எண்ணம் இளம்மட்டத்தில் உணர்ச்சிகளைத்தூண்டி புலிகளின் அணியில் அவர்களை பெருமளவில் சேர்க்கும், அவ்விதம் சேர்ந்தவர்களைக் கொண்டு நீண்டகால அடிப்படையில் போராட்டம் நடத்தப்படும் இவற்றையெல்லாம் யாழ். குடாநாட்டை சிறிலங்கா தாக்கி பிடித்துவைத்திருப்பதற்கு எவ்வளவு படையினரை உபயோகிக்க எண்ணி உள்ளார்கள் என்பதிலும் புலிகளிடமிருந்து எவ்வளவு குடிமக்களைத் தம் கட்டுப்பாட்டுக்குள் அவர்களால் கொண்டு வரமுடியும் என்பதிலுமே கடைசியில் தங்கியிருக்கும். யாழ்ப்பாணச்சமரில் புலிகள் பெருமளவில் சுடும சக்தியை பிரயோகிப்பார்களேயானால், புலிகளைப் பலவீனப்படுத்துவதற்கு தமிழ்நாட்டிலும் பாக்குநீரிணையிலும் இந்தியாவின் நடவடிக்கை போதுமானது என்ற மாயையை? அரசாங்கம் கைவிடுவது நல்லது. தமிழ்நாட்டில் உள்ள வழங்கல் நிலையங்கள் மூடப்பட்டதால் உற்பத்தி செய்ய முடியாது போயிற்றென்றே அநுள் 89 சமீபத்தில் பூநகரியில் உள்ள மட்டுவில் நாடு என்ற பகுதியில் இராணுவத்திற்கு எதிராக உபயோகிக்கப்பட்டதென 15-1-92 ஈழநாதம் பத்திரிகை கூறுகிறது. அதுமல்லாமல் இந்தக்கிழமை இந்திய அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் த ஈ. வி. புலிகளுக்கு பாரிய இயந்திரத்துப் பாக்கிகளுக்கும் றைபிள்களுக்கும் தேவையான வெடிமருந்துகளும் மற்றும் பொருட்களும் தங்களின் கண்காணிப்பை மீறி வங்காளவிரிகுடா ஊடாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளதாக கூறியுள்ளளார். அரசாங்க இராணுவப் புலனாய்வுத்துறையுடன் இணைந்துள்ள விடுதலைப் புலிகள் எதிர்ப்புக்குழு ஒன்று புலிகள் இப்போது கடந்த சில கிழமைகளாக பின்னுதைப்பற்ற (RCL) துவக்குகளையும் 50 மி.மீ குழல்விட்ட துப்பாக்கிகளையும் பாவிக்கத்தொடங்கியுள்ளனர் என்று கூறியுள்ளது. டில்லியிலுள்ள இன்னொரு விடுதலைப்புலிகள் எதிர்ப்புக் குழு கடந்த வெள்ளியன்று தென்கிழக்கு ஆசிய நாடொன்றில் உள்ள பல்தேசிய வியாபார நிலையமொன்றின் உரிமையாளரும் புலிகளுக்கு கப்பல்களில் ஆயுத விநியோகத்தைச் செய்பவருமான ஒருவரை இந்தியாவினால் கண்டு பிடிக்க முடியவில்லை என்று கூறியுள்ளது. அவர் பிரபாகரனுக்கு ஆயுதங்கள் கொள்வனவு செய்யும்கேபியின் (KP) நெருங்கிய நண்பராவார்.

ஆகவே இது ஒரு நீண்ட சமராகவே இருக்கும். யாழ்ப்பாணச்சமரின் பின் எவ்வளவு மனிதவளம் புலிகளிடம் இருக்கும்என்பதிலும் யாழ்ப்பாணத்தைத் தாக்கி அந்த நிலை கொண்டிருக்கும் அரசாங்கம் எவ்வளவு இராணுவத்தை உபயோகிக்க முடியும் என்பதிலுமே சமரின் முடிவு தீர்மானிக்கப்படும்.

முற்றும்

(நன்றி: 09-02-1992 ஐலண்ட்)

## தொண்டாவில் தவறில்லை ஐ.தே.க உறுப்பினர் கூற்று

(கொழும்பு)

தமது இலத்திற்காகவே திரு. தொண்டமான் குரல் கொடுத்து வருகின்றார். இதில் என்ன தவறு இருக்க முடியும் என்று எம்பிலிப்பிட்டியா பிரதேச சபையின் ஐ.தே.க உறுப்பினர் நெவில் விஜயரட்ணா கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற பிரதேச சபைக் கூட்டத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது தமது இனத்திற்காகவே அமைச்சர் தொண்டமான் குரல் எழுப்பி வருகின்றார். இது தவறானதல்ல எனக் குறிப்பிட்டார்.

## துவிச்சக்கர வண்டிகளுக்கும் காப்புறுதித் திட்டம்

துவிச்சக்கர வண்டிகளும் இனிமேல் காப்புறுதி செய்யப்படவுள்ளன. மோட்டார் கார் மோட்டார் சைக்கிள் என்பவற்றிற்கு காப்புறுதி செய்யப்படுவதைப் போல துவிச்சக்கர வண்டிகளுக்கும் காப்புறுதி செய்யும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த காப்புறுதிக் கூட்டுத்தாபனம் முன்வந்துள்ளது. இதன்மூலம் துவிச்சக்கர வண்டிகளில் செறு வியாபாரம் செய்வோர் பெரிதும் நன்மையடையவுள்ளனர். அங்காடி வியாபாரிகளுக்கும் காப்புறுதி செய்தல் விரிவாக்கப்படவிருப்பதாகவும் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய 10, 50ரூபா நோட்டுகள் நேற்றுமுதல் புழக்கத்தில்

(கொழும்பு)

பத்து ரூபா, ஐம்பது ரூபா பெறுமதியுடைய புதிய நோட்டுக்கள் நேற்று முதல் மத்திய வங்கியினால் புழக்கத்திற்கு விடப்பட்டுள்ளன. தேசிய பாரம்பரியங்களைப் பிரதிபலிக்கும் பல அம்சங்கள் இந்நோட்டுக்களில் அச்சிடப்பட்டுள்ளன. இந்த நோட்டுக்கள் தற்போது புழக்கத்திலிருக்கும் நோட்டுக்களை விட அளவில் சிறியவையாக இருக்கின்றன.

## சாரணர் ஜம்போறி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இம்மாதம் இருபத்தொன்பதாம் திகதி முதல் பங்குனி இரண்டாம் திகதிவரை சாரணர்களுக்கான சிம் ஜம்போறி நடைபெறவுள்ளது. காங்கேசன்துறை சாரணர் சங்கம் நடத்தும் இந்த 'சிம் ஜம்போறி'யில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சாரணர்களும் திரிசாரணர்களும், மாவட்ட திரிசாரணர்களும் மற்றும் சாரணஉத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சிங்கப்பூர் முதலீட்டாளரின் நம்பிக்கை

(கொழும்பு)

''இலங்கையில் நிலைமை சுமுகமடைந்து இந்திய உபகண்டத்திற்கு சேவையாற்றும் பிராந்திய தலைமையகமாக மாறக்கூடும்எனநான்நம்புவதாலேயே கொழும்பு நகரின் மத்தியில் 466 கோடி மூதலீட்டுடன் 39 மாடிகள் கொண்ட இரட்டை கோபுர நிர்மாணத் திட்டமொன்றைநிறைவேற்ற திட்டமிட்டுள்ளேன்.''

இவ்வாறு சர்வதேச புகழ் பெற்ற சிங்கப்பூர் முதலீட்டாளர் எஸ் பி. தலூர் தெரிவித்துள்ளார்.

## மேஜர் செங்கதிர் நினைவாக அறிவகம், பூங்கா திறப்பு

(நெல்லியடி)

வவுனியாவில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மேஜர் செங்கதிர், வீரவேங்கை 'சிந்து' ஆகியோரின் ஓராண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நேற்று முன்தினம் கரவெட்டி மேற்கு விக்கினேஸ்வரா மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

திரு அமரண்ணா தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் தமிழீழ மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்பு பிரிவு பொறுப்பாளர் பரா, கடற்பிராந்திய மக்களுறவு கொள்கை முன்னெடுப்பு பிரிவு பொறுப்பாளர் வாஞ்சிநாதன், கடற்பிராந்திய தளபதி சூசை, யாழ் மாவட்ட கடற்பிராந்திய அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ஸ்ரனிஸ் மாஸ்டர், யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி உட்பட்ப் பலர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

மேஜர் செங்கதிரின் தந்தை நடேஸ் குத்து விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பிக்க வடமராட்சி இராணுவத் தளபதி செல்வம் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து செங்கதிர் அறிவகத்தை யாழ். மாவட்ட தளபதி செந்தளன் திறந்து வைத்தார். சிறுவர் பூங்காவை யாழ். மாவட்ட மகளிர் முன்னணி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் செல்வி ஆர்த்தி திறந்து வைத்தார்.

மேஜர் செங்கதிரின் இருபத்தைந்து அடி உயரமான முழுத்தோற்றப் படமொன்று பெரும் திரளாக திரண்டிருந்த மக்களால் எடுத்துச் செல்லப்பட்டு நெல்லியடியில் திரை நீக்கம் செய்யப்பட்டது.

## விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

அமிர்தலிங்கம் மற்றும் யோகேஸ்வரன் கொலைகள் தொடர்பான வழக்கு விசாரணை நேற்றுக் கொழும்பில் ஆரம்பமாகியது. உயர் நீதிமன்ற நீதிபதி வீரசூரிய முன்னிலையில் இவ் வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

## மகாசிவராத்திரி

(ஊரெழு)

ஊரெழு சத்திபுரம் சிவபூரணி காளியம்மன் தேவஸ்தானத்தில் எதிர்வரும் திங்கட்கிழமையன்று (02-03-92) மகாசிவராத்திரி விழா வழமை போன்று சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

Nallur Kandaswamy Kovil

## சிந்தனைக்கு

ஒவ்வொரு செயலைச் செய்வதிலும், உரியமதிப்பையும் உற்ற நிதானத்தையும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்.

— —மார்க்ஸ் அரேலியட்

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 27-02-1992
தொலைபேசி
கிளியீடம் 025-2839 நிர்வாகபீடம் 2398
த. பெ. எண் 05

# இந்தியா - இஸ்ரேல் நெருங்கி வரும் உறவு

இந்தியாவில் நிகழும் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட இஸ்ரேல் உட்பட எந்த நாட்டினதும் தொழில்நுட்ப உதவிபெற இந்தியா தயங்காது என பாதுகாப்பு அமைசீசர் சரத்பவார் தெரிவித்துள்ளார். அமைச்சர் சரத்பவாரின் இக் கூற்று சிறிலங்கா முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் கூற்று ஒன்றை ஞாபகப்படுத்துவதாகவுள்ளது. 1983இல் தமிழர் தேசிய இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக வெடித்துக் கிளம்பிய போது, ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்தார்: 'பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கு எந்தப் பேயுடனும் கூட்டுச் சேர அரசாங்கம் தயாராக இருக்கின்றது என்று. தனது எண்ணத்தின் படியே அவர் பல 'பேய்'களுடன் - எஸ். ஏ. எஸ். மொஸாட், ரோ, - கூட்டுக்களை வைத்துக் கொண்டது உண்மைதான். ஆனால், அவர் நினைத்தது நான் நடக்கவில்லை.

அமைச்சர் சரத்பவார், இஸ்ரேலிடம் உதவிபெற இந்தியா தயங்காது எனத் தெரிவித்திருந்தமை வெறும் அறிவிப்பல்ல. சரத்பவார் இவ்வறிவிப்பை விடும் முன்னரே இஸ்ரேல் அரசாங்கத்தின் உதவி கோரிக் கடிதம் எழுதியுள்ளார். இக் கடிதத்தை இஸ்ரேலிய அரசாங்கம் தற்பொழுது பரிசீலித்தும் வருகின்றது.

அண்மையில் இந்தியாவிற்கும், இஸ்ரேலுக்கும் இடையில், இராஜரீக உறவுகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இருநாடுகளினதும் உறவு மிக நெருக்கமடைந்து வருகின்றது. இஸ்ரேலுக்கும் இந்தியாவிற்கும் வளர்ந்து வரும் நெருக்கமான உறவானது இருநாடுகளைப் பொறுத்தும் முக்கியமானதாகும். பரந்து விரிந்த இஸ்லாமிய உலகின் இரு எல்லைகளில் உள்ள, ஏதோ ஒருவகையில் இஸ்லாமிய நாடுகளினால் தொல்லைகளை அனுபவிக்கின்ற இந்தியாவும் இஸ்ரேலும் ஒரு பொதுக்கருத்தின் அடிப்படையில் - இஸ்லாமியருக்கு எதிர்ப்பு — ஒன்று சேருதல் என்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தும் ஒன்றல்ல.

இதேவேளை, இந்தியா இதுவரை கடைப் பிடித்து வந்த வெளியுறவுக் கொள்கை முடிவிற்கு வந்துள்ளது. அடக்கு முறைக்கு எதிரான போலியான கூப்பாடும், பாலஸ்தீனத்திற்கான ஆதரவு என்ற நிலைப்பாடும் இனிக் கேள்விக்குரியதாகியுள்ளன.

1987 இல் சிறிலங்காவுடன் இந்தியா செய்து கொண்ட சமாதான உடன்படிக்கையின்படி சிறிலங்காவில் செயற்படும் வெளிநாட்டு உளவு, மற்றும், கூலிப் படையினர் வெளியேற வேண்டும் என்றும், வெளிநாட்டு இராணுவத்தினருக்கு தளவசதிகளோ தங்குமிட வசதிகளோ வழங்கப்படக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின்பின் அதைநிறைவேற்றுவதில் அக்கறையாகவும் இருந்தது. மொஸாட், எஸ். ஏ. எஸ். வெளியேற்றவும் பட்டன.

அன்று, தனது நலனுக்காக அவ்வாறு நடந்து கொண்ட இந்தியா இன்று, சிறிலங்காவில் இருந்து துரத்திய கூலிப்பட்டாளங்களைத் தனது நாட்டிற்குள் கொண்டுவர முற்படுகின்றது மேலும் வெளிநாட்டுப் படைகளுக்குத் தங்குமிட வசதியோ அன்றி துறைமுக வசதியோ அழிக்கக் கூடாது என ஒப்பந்தம் மூலம் வற்புறுத்திய இந்தியா இன்று அமெரிக்கப் படைகளுடன் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கூட்டு கடற்படை ஒத்திகைகளை மேற்கொள்வது தொடர்பாகப் பேசிவருகின்றது.

அதாவது இந்தியா தற்பொழுது தனது உண்மைச் சொரூபத்தை வெளிப்படையாகக் காட்டத் தொடங்கியுள்ளது. ஊருக்குத்தான் உபதேசம் தனக்கல்ல என்பதையும் காட்டியுள்ளது. இந்தியாவுடனான இவ் உறவால் இஸ்ரேல் பெரு நன்மை அடையக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. ஆசியாவில் இஸ்ரேலுக்கு மூடிக்கிடக்கும் பல கதவுகள் இனித் திறக்கப்படக் கூடும். இதனை இஸ்ரேலும் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளது. ஆசிய நாடுகளில் இஸ்ரேல் காலடி எடுத்து வைக்க இந்தியா ஒரு நுழைவாயிலாக இருக்கும் என்று இந்தியாவிற்கான இஸ்ரேலிய தூதரகப் பொறுப்பதிகாரி வெட்ஜ் குறிப்பிட்டார். இக் கூற்றில் தவறு ஏதுமில்லை. இஸ்ரேல் பெருமளவில் சம்பாதித்துக் கொள்ளும்.

பாக்குநீரிணையில்

# இந்.இலங்கை கடற்படைகள் கூட்டுரோந்துபுரியவேண்டும்

- அத்தாவுட சனவிரத்னா

சாங்கம் புத்தியுடன் செயல் வந்துவிட்டது எனக் குறிப்படுத்த வேண்டிய நேரம் பிட்டார்:

(கொழும்பு)

வடக்கிற்கு வந்து சேரும் ஆயுதங்களைத் தடுப்பதற்கு அப்பகுதியில் இந்தியாவுடன் இணைந்து கூட்டு ரோந்து நடவடிக்கையை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேகாலை மாவட்ட எம். பியான, ஐக்கிய சோசலிச முன்னணியின் எம். பி. யான அத்தாவுட சனவிரத்தினா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவசரகால சட்டத்தை மேலும் ஒரு மாத காலம் நீடிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்-

வடக்கிற்கு ஆயுதங்கள் கொண்டு வருவதைத் தடுப்பதற்கு இலங்கைக் கடற்படையினர் அப்பகுதியில் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை நாம் அறிவோம்.

எனினும் இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கையைப் பயன்படுத்தி இந்தக் கூட்டு நடவடிக்கையை அர

## தொலைக்காட்சி அரசின் கட்டுப்பாட்டில்

(கொழும்பு)

சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் மக்கள் மயப்படுத்தப்படாமல், நூறுவீதம் அரசாங்கப் பங்குடைய கம்பனியாக மாற்றப்படும் என்று நிதி அமைச்சுக்கான உபகமிட்டி முடிவு செய்துள்ளது இச் சுயாதீன தொலைக்காட்சி தொடர்ந்து அரசாங்கத்தின் கைகளிலேயே இருக்குமெனவும் அதிகாரபூர்வ வட்டாரங்கள் கூறியுள்ளன.

## உபதபால் அதிபர்கள் சேவைநீடிப்பு

(கொழும்பு)

உபதபால் அதிபர்கள் அறுபத்தைந்து வயதுவரை பணியாற்றலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தபால் தந்தி தொலைத்தொடர்பு அமைச்சர் ஏ.எம்.எல்அதிகாரி இது பற்றிக் கூறுகையில் அவர்களுக்கு அறுபத்தைந்து வயதுவரை சேவையாற்ற சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

## புதிய வெளிநாட்டு ஒலிபரப்பு சேவை

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வெளிநாடுகளில் உள்ள நேயர்களுக்கென புதிய சர்வதேச சேவையொன்றினை நேற்று ஆரம்பித்துள்ளது.

நாட்டின் நிலையை சித்தரிப்பதும், இலங்கையின் அபிவிருத்தி வேலைகளை துரிதப்படுத்தவும் இச் சேவை பயன்படுத்தப் படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாரத்திற்கு ஒரு தடவை காலை 5.00 மணிமுதல் 5.30 மணி வரை நடை பெறவுள்ள இச் சேவை குறிப்பாக அமெரிக்காவிலுள்ள நேயர்களை நோக்கமாகக் கொண்டு ஒலிபரப்பப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெளிநாட்டுச் சேவையை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக வெளிநாட்டமைப் பொன்று ஐந்துலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இடிந்து விழும் நிலையில் தோட்ட குடியிருப்புகள்

கேகாலை மாவட்டத்திலுள்ளமக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்குச்சொந்தமான பல தோட்டங்களில் உள்ள தொழிலாளர்குடியிருப்புகள் இடிந்து விழும்நிலையில் உள்ளன. இதனால் அவற்றில் வாழும் தொழிலாளர் குடும்பங்கள் பெரும் பீதியுடன் வாழ்கின்றன.

கேகாலை மாவட்ட ஜனவசம பிரான்திய்த்தில் உள்ள எதிராபொல, அட்டாளை, பிந்தெனிய, தனுமாலை, பள்ளேகம, ஆகிய தோட்டங்களில் அதிகமான லயன்கள் மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளன.

மேலும்புளத்கொபிட்டிய எதராபொல தோட்டத்தில் ஒரு வருடத்திற்குமுன் இடிந்து விழுந்த லயன் அறை ஒன்று இதுவரை திருத்தப்படாமல் இருக்கிறது. மழை பெய்யத் தொடங்கினால், ஏனைய அறைகளும் இடிந்து விழலாம் எனத தொழிலாளர் குடும்பங்கள் கவலை கொண்டுள்ளன. தொழிற்சங்கங்களும், கடிதத் தொடர்போடும், பேச்சுவார்த்தை என்ற போர்வையோடும், தம் கடமைகளை முடித்துக் கொள்கின்றன.

இத்தகைய சம்பவங்களால் தொழிலாளர் வர்க்கம், இன்று தொழிற் சங்கங்களையும் அரசியல்வாதிகளையும் நம்பிப் பயனில்லை என்ற இறுதி முடிவுக்கு வந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

## பட்டதாரி பயிலுனர் ஆசிரியர் போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிப் பயிலுனர் ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைகள் இம்மாதம் இருபத்தொன்பதாம் திகதி சனிக்கிழமையன்று இடம்பெறவுள்ளது. யாழ். வேம்படி மகளிர் உயர் தர பாடசாலையிலும், யாழ். மத்திய கல்லூரியிலும் நடை பெறவுள்ளது. பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டைகளை யாழ். கல்வித் திணைக்களத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## ரூபவாகினி-ஐ. ரி. என்.னில் தமிழ் கலைஞர் புறக்கணிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா அரசுக்கு சொந்தமான ரூபவாகினி தொலைக்காட்சிச் சேவையும், சுயாதீன தொலைக்காட்சி சேவையும், தமிழ் மொழி நிகழ்ச்சிகளுக்கும், தமிழ்க் கலைஞர்களுக்கும் உரிய முக்கியத்துவம் கொடுப்பதில்லை எனத் தெரியவந்துள்ளது.

சிங்கள நாடகங்களுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் தமிழ் நாடக வளர்ச்சிக்கு ரூபவாகினி கலையகம் கொடுபபதில்லை எனவும், தமிழ் நாடக தயாரிப்புக்கு தொழில்நுட்ப உதியோகத்தர்கள் போதிய ஒத்துழைப்பு வழங்குவதில்லை எனவும், கொழும்பில் தமிழ் கலைஞர் வட்டாரங்களில் மனம் புழுங்குவதாகக் கூறப்படுகிறது.

தமிழ் நிகழ்ச்சி என்று அறிவிப்புச் செய்துவிட்டு பின்னர் அவை ரத்துச் செய்யப்பட்டு சிங்கள அல்லது ஆங்கில நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு செய்யப் படுவதும் ரூபவாகினியில்அடிக்கடி இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தமிழ் மக்களை இன, மொழி ரீதியில் ஒதுக்கும் போரினவாதப் போக்கின் வெளிப்பாடாகுமோ என்றும் சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இளைப்பாறிய ஆசிரியர்களை

## ஒப்பந்த அடிப்படையில் சேவையில் சேர்க்க முடிவு

(யாழ்ப்பாணம்)

சுயவிருப்பத்தின் பேரில் இளைப்பாறிய ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களை மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்துக்கொள்ள யாழ்ப்பாண கல்வித் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

எனவே 44/90 இலக்க சுற்று நிருபத்திற்கு இணங்க ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் தமது முழு விபரங்களையும் எழுத்து மூலம் தெரிவித்து இந்தமாதம் இருபத்தொன்பதாம் திகதிக்கு முன் யாழ்ப்பாண கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பங்களை அனுப்புமாறு யாழ். கல்வித் திணைக்களம் கோரியுள்ளது.

(க)

## தென்ஆபிரிக்கா வெற்றி

(மெல்போர்ன்)

சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் நேற்று நடைபெற்ற உலகக்கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி அவுஸ்திரேலிய அணியை 9 விக்கெட்டுக்களால் தோற்கடித்துள்ளது.

அவுஸ்திரேலிய அணி 49 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 170 ஓட்டங்களை பெற்றது. இதனை எதிர்த்து விளையாடிய தென்னாபிரிக்க அணி ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 46 ஓவர்களில் 171 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

## சமயப்பணி குறித்து கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

யாழ். செயலகப் பிராந்திய சபை செயலகத்திற்கு உட்பட்ட இந்துக்கோவில்களின் சமய வளர்ச்சி, சமயப் பணிகள்பற்றிய கருத்தரங்கு ஒன்று இல. 4, பழைய பூங்கா வீதியில் உள்ள பிரதேச சபை செயலகத்தில் தெல்லிப்பழை துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மாஅப்பாக்குட்டி தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இந்த இந்துசமயப்பணிகள் பற்றிய ஆலோசனைக்கூட்டத்திற்குப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட சகல இந்துசமய ஆலயங்களின் தர்மகர்த்தாக்களையும் தவறாது சமுகம் தரும்படி கோரப்பட்டுள்ளது. (24)

# தன்னம்பிக்கை உடையோராய் மாணவர் வளர வேண்டும்

## பேராசிரியர் துரைராசா

(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் தம்காலிலேலே நிற்கக் கூடியளவிற்கு தொழில் முன்னிலைக் கல்வியிலும், ஏனைய துறைகளிலும் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என வரணி மத்திய மகாவித்தியாலய உயர்தர மாணவர் மன்றம் நடாத்திய மதிய போசன விருந்து வைபவத்தில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் அ. துரைராசா கூறினார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மேற்படி விருந்தின் போது அவர் மேலும் உரையாற்றுகையில்; இவ்வாறான ஒன்றுகூடல் நிகழ்ச்சிகளை தற்கால சூழ்நிலையைக் கருதி நடத்தாது விடின் அது மாணவர்களின் உள்ளத்திலே தாக்கத்தை ஏற்படுத்திவிடக்கூடும் மாணவர்கள் இச்சமுதாயத்திலே தன்நம்பிக்கையுடைய வர்களாக வளர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இந்த வைபவத்தில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் பொ. சிவகுருநாதன், உதவி அரசாங்க அதிபர் பு. சுந்தரம்பிள்ளை, அயல் கொத்தணி அதிபர் அ. பொ. செல்லையா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## மீனவருக்கு வலைகள்; செஞ்சிலுவை ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து வீடுகளில் தங்கியுள்ள மீனவர்களுக்கும் வலை இன்மையால் தொழில் செய்ய முடியாத நிலையில் இருக்கும் மீனவர்களுக்கும் இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் வலைகளை வழங்கவுள்ளது. இவ்வலைகளைப் பெற விரும்பும் மீனவக் குடும்பங்களைச் சேர்ந்தோர் தமது "இ" அட்டை மற்றும் அடையாள அட்டையுடன்வந்து தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறு சண்டிலிப்பாய்கிளை கேட்டுள்ளது. (ச)

## லெப். சுரேஷிற்கு மக்கள் அஞ்சலி

(புங்குடுதீவு)

இம் மாதம் 22 ஆம் திகதி பலாலிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் விழுப்புண்பட்டு சிகிச்சை பெற்று வந்தபோது 25 ஆம் திகதி வீரச்சாவு எய்திய லெப்ரினன்ட் சுரேஸ் (சின்னத்துரை-தயாபரன் மண்டைதீவு -4) அவர்களின் புகழுடம்பு 26 ஆம் திகதி காலை விடுதலைப் புலிகள் அரசியற் பிரிவின் தீவக பணிமனையில் வைக்கப்பட்டிருந்தது. பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு மாவீரன் சுரேஸிற்கு தமது அஞ்சலிகளை செலுத்தியபின் புகழுடல் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினரின் 'பான்ட்' வாத்திய இசையுடன் கோயில் வீதி வழியாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் 'மாவீரர் துயிலும் மயானத்தில்' நல்லடக்கம் செய்யப்பட்டது. (22)

## புலமைப் பரிசில்

(கொழும்பு)

யோன் குளோ போர்ட் புலமைப் பரிசில்களுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் விண்ணப்பம் கோரியுள்ளது. இப் புலமைப் பரிசில் திட்டத்தின்கீழ் 1993 ஆரம்பப்பகுதியில் அவுஸ்திரேலியாவில் ஆரம்பிக்கப்படவுள்ள பட்டப்படிப்புக்கான கற்கை நெறிக்கு ஆர்வமுள்ள வர்களிடமிருந்து எழுத்து மூலமான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

## புதிய விலைப்பட்டியலும் விநியோகத் திட்டமும்

(யாழ்ப்பாணம்)

பங்குனி மாதத்திற்கான உலர் உணவு விநியோகத்திற்குரிய புதிய விலைப்பட்டியலும் விநியோகத்திட்டமும் வெளியிடப்பட்டிருக்கிறது.

| பொருள் | அங். எண். 1 | அங். எண். 2 | அங். எண். 3 | அங். எண். 4 | அங். எண். 5 | கிலோ விலை ரூபா |
|---|---|---|---|---|---|---|
| அரிசி | 2 கிலோ | 4 கிலோ | 6 கிலோ | 8 கிலோ | 10 கிலோ | 14 80 |
| மா | 2 கிலோ | 4 கிலோ | 6 கிலோ | 8 கிலோ | 10 கிலோ | 13.25 |
| சீனி | 500 கிராம் | 750 கிராம் | 750 கிராம் | 1 கிலோ | 1 1/2 கிலோ | 25.90 |

உலர் உணவு விநியோகத்திற்கான 'அ', 'உ' ஆகிய அட்டைகளுக்கு மேற்படி விலையிலும் அளவுத் திட்டத்தின்படியும் பொருள்கள் விநியோகிக்கப்பட இருக்கிறது. இதற்கான சுற்று நிருபம் யாழ். செயலக புனர் வாழ்வுப் பகுதியினரால் அனைத்து பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களிற்கும், பிரதேச ஆணையாளர் செயலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

அதேவேளை மேலதிக வகையான பொருள்களை பாவனையாளருக்கு வழங்க விரும்பும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பின்வரும் பொருள்களை நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. பயறு ரூபா 28.00. கௌப்பி - ரூபா 24 00, பட்டாணி - ரூபா 47.00, கைவன்ட் மா - ரூபா 45.00, அங்கர் - ரூபா 45.00, லக்ஸ்பிறே ரூபா 47 33, விற்றா ஸ்பிறே ரூபா 21.87, விற்றா மில்க் [200 கிராம்] ரூபா 11·36, இவற்றை விட தேயிலை, பருப்பு ஆகியனவும் விற்பனை செய்யலாம். (க)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இந்திய லோக் சபாவில்

# பிரச்சினைக்குரிய கடிதம்; நிதியமைச்சர் சமர்ப்பிப்பு

(டில்லி)

உலக வங்கியின் தலைவருக்குச் சென்ற ஆண்டு தவம்பர் மாதம் 11 ஆம் திகதி அனுப்பி வைத்த கடிதத்தின் பிரதியை மத்திய நிதி அமைச்சர் கலாநிதி மன்மோகன்சிங் நேற்றுப் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் சமர்ப்பித்தார்.

லோக்சபா சபாநாயகரும், ராஜ்ய சபையின் தலைவரும் பணித்ததையடுத்து அமைச்சர் இந்த ஆவணத்தைச் சபையில் தாக்கல் செய்தார்.

முன்னராக இந்தப் பிரச்சினை இரு சபைகளிலும் குழப்பத்துக்கு வழிவகுத்தது.

மன்மோகன்சிங் இந்த ஆவணத்தை லோக்சபாவில் சமர்ப்பித்துப் பேசும்போது, இரண்டாவது கடிதம் எதுவும் அனுப்பப்படவில்லைஎன்றார். உலக வங்கியிடமிருந்து பதில் எதுவும் வரவும் இல்லை என்று விளக்கினார்.

முன்னாள் பிரதம மந்திரி சந்திரசேகர் முற்பகலில் உலக வங்கிக்கு நிதி அமைச்சர் மன்மோகன்சிங் எழுதிய கடிதத்தின் பிரதியை எடுத்துக்காட்டிய பின்னர் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் சபையின் நடவடிக்கைகளை நடைபெற விடாமல்நிறுத்திவிட்டார்கள்.

# அரசாங்க அறிவிப்புக்கள்; அரசியல்வட்டாரத்தில்குழப்பம்

(கொழும்பு)

யுத்தம் தொடர்பாகவும் பேச்சுவார்த்தை தொடர்பாகவும் சிறிலங்கா அரசு வட்டாரங்களில் இருந்து வெளிவரும் அறிவிப்புகள் பெரும் குழப்பத்தை கொழும்பு அரசியல் வட்டாரங்களில் ஏற்படுத்தியிருப்பதாக தனது செய்தியாளரின் செய்தி விமர்சனம் ஒன்றை மேற்கோள் காட்டி பி. பி. சி தெரிவித்தது.

சிறிலங்கா அரசு ஒருபுறம் விடுதலைப் புலிகளுடன் யுத்தம் என முழங்கிவரும் அதேவேளை மறுபுறம் சமரச முயற்சிகள் பற்றியும் பேசுகிறது எனவும் பி. பி. சி மேலும் தெரிவித்தது.

வடமாகாணத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஒரு பெரும் இராணுவ நடவடிக்கைக்கு இராணுவம் முற்பட்டு நின்றாலுங்கூட இந்த நடவடிக்கை தீவிரமாக நடக்க முடியாமல் இராணுவம் உள்ளது எனவும் தெரிவித்தது.

## உலகவங்கி நிபந்தனை; நிதியமைச்சு மறுப்பு

(கொழும்பு)

உலகவங்கி சிறிலங்காவிற்கு நிதியுதவி வழங்க விதித்த நிபந்தனைகள் என்ற தலைப்பில் நேற்றைய திவயின பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

பாரிசில் அண்மையில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தில் நான்கு நிபந்தனைகள் விதிக்கப்பட்டதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செய்தி தவறானது என நிதியமைச்சு மறுத்துள்ளது. வாக்களிக்கப்பட்ட உதவிகளை வழங்க எதுவித நிபந்தனைகளும் விதிக்கவில்லை என்பதே உண்மையானதாகும் எனவும் இதுபோன்ற அறிக்கைகளை வெளியிட்டுமக்களை தவறான வழிக்கு இட்டுச் செல்வது கவலைக்குரியது எனவும் நிதியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## பாகிஸ்தானுக்கு ஏவுகணை இல்லை - ஜேம்ஸ்பேக்கர்

[வாஷிங்டன்]

பாகிஸ்தானுக்கும் வேறு சில நாடுகளுக்கும் ஏவுகணைகளை ஏற்றுமதி செய்யாதிருக்க சீனா ஒத்துக்கொண்டிருக்கின்றது. அமெரிக்க வெளியுறவு அமைச்சர் யேம்ஸ் பேக்கர் வாஷிங்டனில் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் ஏவுகணை செலுத்து வாகனங்களையும், நவீன கம்பியூட்டர் தொழில் நுட்பத்தையும் ஏற்றுமதி செய்வதை புஷ் நிர்வாகம் தொடர்ந்து எதிர்த்து வருவதாக அமெரிக்க மத்திய உளவு இலாகாவின் (சி. ஐ. ஏ.) பணிப்பாளர் றொபேட் கேஜ் கூறியிருக்கிறார்.

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அமுத மொழியானின் 'மொட்டுகளல்ல - வித்துக்கள்' எனும் நூல் வெளியீட்டு விழா நாளை மாலை 5 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

இந்தவிழாவிற்கு செம்பியன் செல்வன் தலைமைவகிப்பார். சிரித்திரன் ஆசிரியர் சுந்தர், இ. ஜெயராஜ், பேராசிரியர் அ. துரைராஜா, சோ. பத்மநாதன் ஆகியோர்இந்த நிகழ்ச்சியில் பங்குபற்றுவர்.

## நீரால்

மாசடைகிறது. வளர்முக நாடுகளில் ஏற்படும் சிசு மரணங்களில் 80 சதவீதமானவை நீரினால் பரவும் நோய்களால் ஏற்படுகின்றன என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

## சீனாவிடமிருந்து அத்தியாவசியசேவைகள்பிரமாணம்

# மக்கள் ஜனநாயக உரிமைகளை நசுக்குகிறது

(கொழும்பு)

அத்தியாவசிய சேவைகள் பிரமாணமும், கட்டளையும் வடக்கிலும், கிழக்கிலும் விடுதலைப் புலிகள் நடவடிக்கைகளில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது. அல்லது வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் இடம்பெறும் தீவிரவாத நடவடிக்கைகளையும் அது கட்டுப்படுத்தாது. மாறாக மக்கள் சமாதான வழியில் தமது ஜனநாயக உரிமைகளைப் பாவிப்பதையும் மற்றும் வேலை நிறுத்தம் செய்வதற்கான தொழிலாளர்களின் உரிமையையும் அத்தியாவசிய சேவைகள் பிரமாணம் நசுக்குகிறது.

இவ்வாறு இலங்கை வர்த்தக. கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளர் பாலா தம்பு சங்க உறுப்பினர் பொதுக் கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார்.

பின்வரும் தீர்மானங்களும் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையையும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அரசியல் அமைப்பின் 155 பிரிவின் கீழ் அவசரகாலச் சட்டத்தை பிரகடனம் செய்வதையும் இல்லாதொழித்தல்.

மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுக்கும் அத்தியாவசிய சேவைகள் பிரமாணத்தில் திருத்தம் கொணர்வதோடு, தொழிலாளருக்கு வழங்கப்படும் சேமலாப நிதிக்குப் பதிலாக ஓய்வூதியத் திட்டத்தைச் செயற்படுத்தும் உத்தேச மசோதாவைக் கைவிடும்படி அரசைக் கோருதல்

## 84,000 பாதிக்கப்

வாய்ப்புகள் பணியகம் அறிவித்துள்ளது.

ஒருவருக்கு ஆகக்குறைந்தது 2500 டொலர் நட்டஈடு வழங்கப்படும் எனவும் ஒரு குடும்பத்தில் ஒருவருக்குமேல் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் ஆகக் கூடியது 5000 டொலர் நட்டஈடு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "ஆதாரம்" வெளிவந்தது

தமிழீழ ஆய்வுநிறுவனத்தின் சமூக பொருளாதார விஞ்ஞான ஆய்வு இதழான "ஆதாரம்" சஞ்சிகையின் ஆறாவது இதழ் தற்போது வெளிவந்துள்ளது. வாழவைக்கும் சோயா அவரை, மென்பானங்கள், நெற்சூட்டடிப்பிற்கான மரஉருளைப் பொறியினை உருவாக்கிய விவசாயியுடனான பேட்டி, மற்றும் கால்நடைகள் சம்பந்தமான தகவல்களைஉள்ளடக்கி இந்த இதழ் வெளிவந்துள்ளது.

## ரயில்விபத்தில் ஐந்து பேர் பலி

(கல்கத்தா)

மேற்கு வங்காளத்தில் ஏற்பட்ட ரயில் விபத்தொன்றில் ஐந்துபேர் உயிரிழந்தனர் என்றும் எட்டுப்பேர் காயமடைந்தனர் என்றும் கல்கத்தா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

ஹௌராவில் உள்ள ஊர் ஒன்றின் ரயில்வே /நிலையத்தில் நின்று கொண்டிருந்த பயணிகள் ரயிலுடன் சரக்கு ரயில் மோதியதிலேயே இந்த விபத்துஏற்பட்டதாகவும்.

காயமடைந்தவர்களில் ஐந்து பேர் ரயில்வே ஊழியர்கள் என்றும் மீட்புவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் கல்கத்தா பொலிசார் தெரிவித்துள்ளனர்.